காலை முரசு

பக்கங்கள் 23

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 18 சனிக்கிழமை 04.11.2023 அதிர்வு 95

## ஜனாதிபதி பயணித்த ஹெலிக்கொப்டர் நேற்று திடீரென தரையிறக்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணித்த ஹெலிக்கொப்டர் திடீரென பாடசாலை மைதானம் ஒன்றில் தரை யிறக்கப்பட்டுள்ளது. 04▶

# காஸா விடயத்தில் ஒரு பார்வை; இலங்கைக்கு வேறு பார்வையா?

## ஐ.நா. மீது சீறுகின்றார் ரணில்

"ஐக்கிய நாடுகள் சபைக்குள் காஸா பகுதியின் மோதல் நிலைமைகளை ஒரு கோணத்திலும், இலங்கையை வேறு கோணத்திலும் பார்ப்பதில் நியாயமில்லை."

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

"அடுத்த செப்டெம்பர் மாத ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு ஐ.நா. தூய்மையான கரங்களுடன் வந்தால் இலங்கை பதிலளிக்கும். இல்லையெனில் நியாயமற்ற விடயத்துக்கு இலங்கை பதிலளிக்க வேண்டுமா?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார். 04▶



## கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில்

# வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் விஜயம் செய்யும் சீனத் தூதுவர்

(ந.லோகதயாளன்)

வடக்கின் 5 மாவட்டங்களுக்குமான 4 நாள் பயணமாக நாளை சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் வருகை தருகின்றனர்.

வவுனியாவை நாளை காலை 10 மணிக்கு வந்தடையும் சீனத் தூதுவர் குழுவினர், அம் மாவட்டத்தில் 500 பேருக்கான வாழ்வாதாரப் பொதிகளை வழங்கி வைக்கவுள்ளனர்.

அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்டத்



துக்குப் பயணிக்கும் சீனத் தூதுவர் குழுவினர், முல்லைத்தீவு 04▶

## சீனிக்கு நிர்ணய விலை

### வர்த்தமானி வெளியீடு



சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவிப்பை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

பொதியிடப்படாத ஒரு கிலோ வெள்ளை சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாவாகவும், பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ சீனிக்கு 04▶

# சீனாவின் ஆதிக்கத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்!

## இந்தியாவிடம் வடக்கு மீனவர்கள் கோரிக்கை

(வடமராட்சி நிருபர்)

"வடக்கு கடலை சீனாவுக்கு வழங்குவதற்கு இலங்கை கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த நிலையில் வடக்கு - கிழக்கு 03▶






இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்று மாலை 5:30 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரம் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தார். மாவை சேனாதிராஜா 03▶





# வடமராட்சியில் கிணறு 40 அடி தாழ் இறங்கியது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் ஒரு கிணறு 40 அடி கீழ் இறங்கியமை தொடர்பில் தேசிய கட்டட ஆராச்சி நிறுவனத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

பொலிகண்டி தெற்கு ஜே 395 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் லயம் அருகே அமைந்திருந்த பொதுக் கிணறே சுமார் 40 அடி வரை கீழ் இறங்கி உள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரும் அப்பகுதி மக்களும் இணைந்து உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமையோடு இவ்வாறு கிணறு தாழ் இறங்கியதற்கான காரணத்தை கண்டறியும்முகமாக தேசியக்கட்டட ஆராச்சி நிறுவனத்தின் உதவியும் கோரப்பட் டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வின் பின்பே கிணறு தாழ் இறங்கியமைக்கான காரணம் தெரிய வரும் எனக் கூறப்படுகின்றது.



# வவுனியா பேராறின் வான்கதவுகள் திறப்பு

## மக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட உள்ளமையால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில் பேராறு நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்துள்ளது.

இதன் காரணமாக பேராறு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்றிரவு திறக்கப்பட இருந்தது. அதனால், அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

குறிப்பாக, பேராறு நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், ஈச்சங்குளம், மருதமடு, பாலமோட்டை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## சீனாவின்...

மீனவர்களது வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்பட்டு வருகின்றது. இந்த அழிவில் இருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்.”

– இவ்வாறு இந்தியாவிடம் வடக்கு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊர்காவற்றுறை க.தொ.கூ. சங்கங்களின் சமாச செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு கோரிக்கை விடுத்தார். இதன்போது வடமராட்சி வடக்கு க.தொ.கூ. சங்கங்களின் சமாச உப தலைவர் நா. வர்ணகுலசிங்கம், ஆதிகோவிலடி க.தொ.கூ. சங்க செயலாளர் இ.மதியழகன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது அ. அன்னராசா மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையினுடைய கடற்றொழில் திணைக்களத்தால் எங்களுடைய வளங்களும், வாழ்வாதாரங்களும், சீனா நாட்டுக்கு விற்கப்பட்டு வருகின்றன. இதனால் எங்களுடைய இருப்பே கேள்விக்குறியாக்குகின்ற நிலையேற்பட்டுள்ளது. இலங்கையின் கடற்றிழில் திணைக்களமும் சீனாவும் சேர்ந்து, வடக்கு கடற்றொழிலாளர்களை கடலை விட்டு அந்நியப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதனால் எங்களுடைய நாட்டிலே எங்களுடைய கடலிலே குறிப்பாக வடகிழக்கு கடலிலே நாங்கள் சுதந்திரமாக கடைற்றொழிலில் ஈடுபட்டு எங்களுடைய வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத அளவுக்கு சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக இம்மாதம் 6 ஆம் திகதி சீன நாட்டுத் தூதுவர் கூட யாழ். மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொள்கின்றார்.

எங்களுடைய பகுதியிலே கிடைக்கின்ற புரதச் சத்துடைய மீனை அல்லது கடல் உணவைப் பிடித்து எங்களுடைய மக்களுக்கு வழங்க முடியாத சூழ்நிலைகளை ஏற்படுத்திவிட்டு, சீன நாட்டு கடலட்டைப் பண்ணைகளை அமமைத்து அங்கு கடலட்டைகளை உற்பத்தியாக்கி அதை சீன நாட்டில் இருப்பவர்களுக்கு உணவாகக் கொண்டு செல்வதற்கு முயற்சி எடுக்கின்றார்கள்.

வடக்கு கடலிலே சீனாவின் ஆதிக்கம் இருக்கியது. இந்த ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி எங்களுடைய கடலில் நாங்கள் இறைமையுடன் வாழ்ந்து தொழில் செய்வதற்கு எங்களது வாழ்வாதாரத்தைக் கொண்டு போவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என எங்களது அண்டை நாடு என்ற வகையில் இந்திய அரசிடமும் பாரதப் பிரதமரிடமும் பலதடவைகள் நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம். அந்தக் கோரிக்கையை, இன்று இந்தியாவின் நிதி அமைச்சர் அம்மணியிடமும் தயவாக முன்வைக்கின்றோம்.

எங்கள் தொப்புள் கொடி உறவாக தமிழ்நாடு இருக்கும் அடிப்படையில் இந்திய நாடு முன்வந்து எங்களது வடக்கு கடலிலே ஏற்பட்டுள்ள சீன ஆதிக்கத்தை குறைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதேபோன்று தமிழ்நாடு மற்றும் இந்தியாவுக்கும் எமக்கும் இடையே இருக்கும் தொப்புள்கொடி உறவுக்குத் தடையாக இருக்கின்ற தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட இழுவைப் படகுகளால் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

இந்தப் பாதிப்பில் இருந்து எங்கள் வடக்கு கடற்றொழிலாளர்களையும் எங்கள் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதில் இருந்தும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். அந்த நடவடிக்கை என்பது 2016 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி டில்லியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை – இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்திலே எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இரண்டு நாடுகளும் இழுவைமடித் தொழிலை முற்றாக நிறுத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டது. அதனடிப்படையில் இந்த விவகாரத்தை முன்னெடுத்துச் சென்று இந்திய இழுவைப்படகுகளால் எங்கள் கடல் வளமும் எங்களது வாழ்வாதாரமும் அழிக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

வடக்கு கடலில் இந்திய மீனவர்களது அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை மூலம் தமிழ்நாட்டுக்கும் வடக்கு மீனவர்களுக்கும் இடையே பிரச்சினையாகக் காட்டி இலங்கை அரசும் கடற்றொழில் திணைக்களமும் மீனவர்களைத் திசை திருப்பி விட்டு மறுபக்கமாகச் சீனாவைக் கொண்டு வந்து எங்களுடைய முற்றத்தில் நிறுத்தும் செயற்பாட்டை மேற்கொள்கின்றார்கள்.

இவ்வாறு சீனா நாடு வடக்கு கடற்பரப்பில் நுழைவதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரியைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகளின் அத்துமீறலே காரணமாக இருப்பதாக நாங்கள் உணர்கின்றோம். எனவே, குறித்த 2 ஆயிரத்து 500 இழுவைப் படகுகள் மூலம் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடியை நிறுத்தி, வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களை சீனாவின் ஆதிக்கத்தில் இருந்து காப்பாற்றுங்கள் எனத் தொப்புள்கொடி உறவுகள் என்ற அடிப்படையில் நாங்கள் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். இதற்கு இந்திய அரசும் பாரதப் பிரதமரும் உரிய முக்கியத்துவம் கொடுத்து எங்களை அழிவில் இருந்து காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.

## இரகசியம்...

தமக்கு சாட்சியமாக தன்னுடன் கட்சியின் பொருளாளர் கனகசபாபதியையும் கூட்டிச் சென்றிருந்தார் – வேலிக்கு ஓணான் சாட்சியம் போல என்று எண்ணியோ என்னவோ..!

கட்சியின் பெருந்தலைவர் இரா சம்பந்தன், கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பொருளாளர் கனகசபாபதி எல்லோருமே கட்சியில் மூத்தவர்கள்தான். மூவருமே எண்பது வயது தாண்டியவர்கள். மூவரும் என்ன பேசி இருப்பார்கள், என்ன புரிந்து கொண்டிருப்பார்கள் என்பது தெரியவில்லை.

நாளை வவுனியாவில் கட்சியின் மத்திய குழுக் கூட்டம். இச்சந்திப்புத் தொடர்பில் மாவை சேனாதிராஜா அங்கு அவிழ்த்து விடும் கதைகளைப் பார்ப்போம்.

★ ★ ★

அரசு அதிகாரிகளின் – அதுவும் உயர் பொறுப்புகளில் இருக்கும் அரச அதிகாரிகளின் – பிரச்சினைகள் வெவ்வேறு வடிவானவை. சாம்பிளுக்கு ஒன்றைத் தரலாம் என்று நினைக்கிறேன்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அவர் அரசின் ஓர் உயர்ந்த நிலை அதிகாரி. அவரின் கீழ் பணியாற்றிய ஒரு பிரிவின் மூத்த பெண் அதிகாரி ஒரு சில தினங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்றார். இதற்கான பிரியாவிடை வைபவம் அந்தச் செயலகத்தில் நடந்தது. அரச உயர் அதிகாரி அங்கு பேச வேண்டிய நிலைமை. அந்தப் பெண் அதிகாரியும் ஓய்வில் சென்று விட்டால் அந்தப் பிரிவை இனி எப்படி இயக்குவது என்று ஆதங்கம் – விசனம் – தலையிடி – அவருக்கு. அவரது அன்றைய உரையில் அது அப்படியே பிரதிபலித்தது. அந்தப் பிரிவை பெயர் குறிப்பிட்டு – சுட்டி – அவர் உரையாற்றினார்.

“எனது செயலகத்தின் இந்தப் பிரிவைத் தற்போது 'நட்'டுக் கழன்றவர்களையும் சில்லு கழன்றவர்களையும் வைத்துத்தான் இயக்க வேண்டிய அவலத்தில் நாம் (நான்) இருக்கிறோம். இந்தச் சீத்துவத்தில் நாங்கள் தங்களுக்கு முறையாகச் சேவையாற்றுவோம் என மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர். இது எப்படிச் சாத்தியம்?” – என்று பெருமூச்சுடன் கூறினார் சிவனின் அந்த அழகு மகன்.

பாவம்... எத்தனை பிரச்சினைகளை இந்த அதிகாரிகள் சமாளிக்க வேண்டியுள்ளது...?

★ ★ ★

மொட்டு கட்சிக்கு (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு) நேற்று ஏழு வயது பூர்த்தியானது. இதனை ஒட்டி கொழும்பு பத்திரமுல்லவில் நெலும் மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று மாலை விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. உட்பட கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். நூற்றுக்கும் அதிகமான பிக்குகள் பிரித் ஓதும் நிகழ்வில் பங்குபற்றினர். மகா சங்கத்தினருக்கு தானம் வழங்கும் நிகழ்வு இன்று இடம் பெறுகின்றது.

இந்தப் பிறந்தநாள் நிகழ்வுகளை அடுத்து, கட்சிக்கு வலுவூட்டும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட உள்ளன என்று கட்சி பிரமுகர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





### காஸா விடயத்தில்...

வெலிமடை புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நேற்று திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனத்தை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி உலக நாடுகள் அனைத்தும் அதற்கு இணங்கிச் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது. பயங்கர வாதத்தை எதிர்க்கும் அதேநேரம், பாலஸ் தீன அரச இறைமை தொடர்பிலான நியதிகளுக்கான ஒத்துழைப்பையும் இலங்கை உறுதிப் படுத்தியிருக்கின்றது. சர்வதேச சமூகத் தின் இந்தக் கண்டன மானது சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கட்டமைப்புக்குள் பதிலடி கொடுக்கும் உரிமையை இஸ் ரேலுக்கு வழங்கியது.

எவ்வாறாயினும், அத்தகைய நியதி கள் உலகளாவிய ரீதியில் நடைமுறையில் இல்லாதிருக்கின்றமை கவலையளிக் கின்றது.

ஐ.நா.முகவர் நிறுவனங்களுக்கமைய காஸாவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை குறித்து சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்கும் பதில்கள் என்னவென்ற கேள்விக்குறி யைத் தோற்றுவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் அமெ ரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இலங்கை மற்றும் காஸா பகுதி தொடர்பில் இந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறையில் எதற்காக வேறுபாடு காட்டப்படுகின்றது? எவ்வாறாயினும் இரு தரப்பினருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட வேண்டும்." – என்றார்.

சர்வதேச சட்டத்தின்படி பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காக எடுக்கப்படும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகக் காணப் பட வேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஜனா திபதி, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தொடர்பிலும் கேள்வி எழுப்பினார்.

அதேபோல் காஸா எல்லையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் மீதான பாதிப்பு தொடர்பில் கவலை தெரிவித்த ஜனாதிபதி, உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருள் இன்மை, அத்தியாவசிய மருந்து பொருட் கள் இன்மை, உள்ளக வருமானம் குறை வடைதல் என்பன இலங்கை கடந்த வருடத் தில் முகம்கொடுத்த நெருக்கடியை விடவும் பாரதூரமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேற்குலக நாடுகள் இலங்கை மற்றும் காஸா எல்லை தொடர்பில் பின்பற்றும் நியதிகளின் வேறுபாடுகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தூய்மையான கரங்களு டன் உலகளாவிய தேவைகளை முன் னெடுக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

வெலிமடை மக்களின் நீதிமன்றச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் வகை யில் மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதி மன்றம், அலுவலக வசதிகள் உட்பட பொது வசதிகளை உள்ளடக்கியதாக மேற் படி 3 மாடிக் கட்டடத் தொகுதி 46 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நிர்மாணித்துள்ளமையினால் குறைந்தபட்ச வசதிகளை கொண்டிருந்த வெலிமடை நீதிமன்றம் மாவட்ட நீதிமன் றம், நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் கூடியதாக மாறியுள்ளது.

சர்வமத வழிபாடுகளைத் தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினை வுப் படிகத்தை திரைநீக்கம் செய்து நீதி மன்ற கட்டத் தொகுதியை திறந்து வைத்தார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கு வெலிமடை சட்டத்தர ணிகள் சங்கத்தினால் நினைவுச் சின்ன மொன்று வழங்கி வரவேற்ப ளிக்கப்பட்டது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரச மைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சட்டத்தரணி நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான அனுராத ஜயரத்ன, தேனுக விதானகமகே, சாமர சம்பத் தசநாயக்க, அ.அரவிந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தேனிபிட்டிய, ஊவா மாகாண ஆளுநர் ஜே.எம்.எல்.முஸம்மில், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர் நீதிமன்ற நீதி யரசர்கள், மாவட்ட நீதிமன்ற நீதிவான்கள், நீதிவான் நீதிமன்ற, நீதிவான்கள், வெலிமடை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கலானி பீ. பத்திரன உள்ளிட்ட சட்டத்தரணிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

### வடக்கின்...

மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமான 500 பொதிகளை மாவட்ட அரச அதிபரிம் கையளிக்கவுள் ளனர். வெலிஓயாவுக்கான 250 பொதி களை அவர்களே நேரில் வழங்கு கின்றனர்.

இதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் பொதிகளைக் கையளித்த பின்பு யாழ்ப் பாணம் வருகின்றனர் சீனத் தூதுவர் குழுவினர்.

நாளைமறுதினம் சீனத் தூதுவர் மற்றும் சீன பௌத்த அமைப்பின் பிரதிநிதிகள் காலை 9 மணியளவில் யாழ். ஆயரைச் சந்தித்துக் கலந்துரை யாடவுள்ளனர்.

அவர்கள் காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாவுள்ள அந்தக் குழுவினர், நெடுந்தீவு மக்களுக்கு 500 பொதிகளைக் கையளிக்கவுள்ள னர்.

அதையடுத்து மாலை 2 மணிக்கு நாவற்குழி விகாரைக்குச் சீனத் தூதுவர் குழுவினர் பயணிக்கின்றனர்.

7 ஆம் திகதி காலை நயினாதீவு பயணிக்கும் சீனத் தூதுவர் குழுவினர், நாகவிகாரைக்கு 250 பொதிகள் வழங்குகின்றனர். அதன்பின்னர் 7 ஆம் திகதி மாலை மன்னாருக்குப் பய ணித்து 8 ஆம் திகதி மன்னார் நிகழ் வுகளில் பங்குகொண்டு அன்று மாலை கொழும்பு திரும்புகின்றனர்.

---

### சீனிக்கு...

295 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

பொதி செய்யப்படாத ஒரு கிலோ சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 330 ரூபாவாகவும், பொதி செய் யப்பட்ட ஒரு கிலோ சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 350 ரூபா வாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

---

### ஜனாதிபதி...

ஹெலிக்கொப்டர் வெல்லவாய, புதுருவகல பாடசாலை மைதானத்தில் நேற்று இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது.

காலநிலையில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றத்தால் ஹெலிகொப்டர் திடீரெனத் தரையிறக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஹெலிக்கொப்டரில் வெலிமடைக்குச் சென்று கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் வேறு ஒரு வாகனம் வரும் வரை புதுருவகல பாடசாலையில் ஜனா திபதி காத்திருந்திருந்தார் என்றும் தெரி விக்கப்படுகின்றது.

# சொத்து விவரங்களை உயர்நீதிமன்றுக்கு விரைவில் சமர்ப்பிப்பாராம் மைத்திரிபால

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன். குண்டுத்தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதை விடுத்து அரசியல் நோக்கத்துக்காக நான் இலக்கு வைக்கப்படுகிறேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

பொலன்னறுவை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கலை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம் பல அறிவுறுத்தல்களை முன்வைத்துள்ளது.10 கோடி ரூபா நட்டஈடு செலுத்துமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல் பயணத்தில் நான் முறையற்ற வகையில் சொத்து சேர்க்கவில்லை. நீதிமன்றத்தின் கட்டளையை மதித்து 15 மில்லியன் ரூபா செலுத்தியுள்ளேன். மிகுதி தொகையை செலுத்த கால அவகாசம் கோரியுள்ளேன்.

டிசெம்பர் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் எனது சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அந்த விவரங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன். மறைக்கும் அளவுக்கு பெருமளவான சொத்துக்கள் என்னிடம் இல்லை.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஜனாதிபதி என்ற ரீதியில் எனக்கு அறிவுறுத்தில்லை என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு தொடர்பான முக்கிய தகவல்களை மறைத்த தரப்பினருக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் வினைத்திறனான வகையில் இடம்பெறவில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தை முன்னிலைப்படுத்தி குறுகிய அரசியல் நோக்கத்துக்கான நான் இலக்குப்படுத்தப்படுகிறேன். நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்வார்கள். – என்றார்.

# இனச்சுத்திகரிப்பு தொடருகின்றது!

## திருமலையில் சிறீதரன. எம்.பி. விசனம்

(அப்துல் சலாம் யாசீம்)

கடந்த 1882ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு தமிழர்களது இருப்பு விகி தாசாரம் மற்றும் நிலங்கள் பறிக்கப்பட்டு இன்னமும் ஓர் இனச் சுத்திகரிப்பு நடைபெற்று வருவதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –



திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கம் மற்றும் பல்துறைசார்ந்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய காணி அபகரிப்புகள் தொடர்கின்றன.


தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தைப் பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சி.

அந்த முன்னெடுப்புகளில் ஒன்றுதான் காணி அபகரிப்பு மற்றும் தமிழர்கள் பூர்வீகமாகக் கொண்ட காணிகளில் விகாரைகளை அமைத்தல் என்பனவாகும்.

இவை தொடர்பாக நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாகக் கருத்து வெளியிட்டு வருகிறேன். நாடாளுமன்றம் தவிர்ந்த ஏனைய சர்வதேச ரீதியிலான அமைப்புக்களிடமும் குரல் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.

மேலும், திட்டமிட்ட அபகரிப்புக்கள் தொடர்பிலான பட்டியல் ஒன்றைத் தயாரித்து வருகிறேன். – எனவும் தெரிவித்தார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தவிர்க்க முடியாத சீன எதிர்ப்பு

இந்திய அரசில் அதிக வலிமை மிக்க பெண்மணியான நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்கு - குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு - வந்து திரும்பிய இரண்டாம் நாள் வடக்கே வருகின்றார் இலங்கைக்கான சீனத் தூதுவர்.

சீனத் தூதுவர் வருகை, வடக்கு பிரதேசத்தில் சீன தரப்பின் பிரசன்னம் போன்றவை தொடர்பில் தமிழர் தாயக பிரதேசத்தில் சந்தேகக் கண்ணுடனான நோக்கும் எதிர்ப்பும் வலுத்து வருவதாகக் களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்குப் பகுதியில் சீனாவின் பிரசன்னமும், முனைப்பும் இந்த பிராந்தியத்தில் அமைதி நிலைக்கு ஆப்பு வைக்கும் எத்தனம் என்று பரவலாக நோக்கப்படுகின்றது.

நீண்ட மூன்று தசாப்த கால கொடூரப் போரின் பின்னடைவுகளை மோசமாகச் சந்தித்து நிற்கும் தமிழர் தாயகம் - குறிப்பாக வடக்கு இலங்கை - இன்னும் அதிலிருந்து மீளவே இல்லை. தடுமாறி நிற்கின்றது.

இந்தச் சூழலில் அப்பிரதேசத்தை தனது வலுவான பிரசன்னம் மற்றும் ஈடுபாடு போன்றவை மூலம் திரும்பவும் பதற்றத்துக்கு உள்ளாக்கும் சீனாவின் நகர்வு, பல தரப்பினரதும் கடும் ஆட்சேபனைக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகி இருப்பது உண்மை.

ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக வற்புறுத்தும் தமிழ்த் தேசிய சக்திகளும், கட்சிகளும், தமிழ்ச் சமூகமும் வடக்கை தமது பூர்வீகமாகவும், மையமாகவும் கொண்டுள்ளன. இயல்பாகவே அவை சமூக, கலாசார, வாழ்வியல் முறைகளில் இந்தியத் தொடர்பு அதிகம் கொண்டவை. தென்னிந்தியாவுடன் தொப்புள் கொடி உறவு பூண்டவை.

இந்தியப் பண்பாட்டியல்புகளுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்ட வடக்கு மக்களின் தாயக பிரதேசத்தில், இந்தியாவுடன் பூகோள அரசியல் போட்டியில் முரண்டு நிற்கும் சீனா, அந்தப் போட்டிக்கான தளமாக வடக்கு இலங்கையையும் மாற்றும் முயற்சியாகவே இங்கு தனது பிரசன்னத்தை அதிகரித்துக் காலூன்ற முயலுகின்றது என்பது இந்தத் தாயகப் பிரதேச பூர்வீக மக்களின் சந்தேகம்.

சீன செயல்திட்டங்களுக்கு அதிகம் இடம் அளிக்கின்றாரே எனச் சில தரப்புகளினால் சந்தேகிக்கப்பட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட பூகோள அரசியல் என்று வந்துவிட்டால் தான் இந்தியப் பக்கமே என்பதைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறிவிட்ட பின்புலத்தில், வடக்கில் காலூன்றும் சீன எத்தனத்துக்கு உள்ளூரில் கடும் எதிர்ப்பு வெளிப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டெழ முடியாமல் இருக்கும் வடக்கு மக்களின் தாயக பூமியைத் தனது பூகோள அரசியல் நெருக்குதல்களுக்கான தளமாகப் பயன்படுத்துவதை சீனா போன்ற நாடுகள் தவிர்த்துக் கொள்வது நல்லது.

## காட்டு யானையால் தாக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர் உயிரிழப்பு



(எம்.ஏ.றமீஸ்)

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரிய ஆலோசகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் சேவையாற்றி வந்த அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகரே இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி அதிகாலை வேளையில் தனது விவசாயக் காணிக்கு சென்று கொண்டிருந்த வேளையில் காட்டு யானைகள் சில வழிமறித்து இவரை தாக்கியுள்ளன. அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை வேளை மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இவர் காட்டு யானைகளைக் கண்ணுற்று மோட்டார் சைக்கிளை பாதையில் நிறுத்தி வைத்து விட்டு அருகிலிருந்த கால்வாய்க்குள் இறங்கி நின்றுள்ளார்.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக யானைகளின் நடமாட்டத்தைக் காணாததால் வீதிக்கு அவர் வந்த வேளையில், மரங்களின் பின்னால் மறைந்து நின்ற யானைகள் அவரை தாக்கி தூக்கி வீசியுள்ளன. இதனால் பலத்த காயங்களுக்கு இவர் இலக்கானமையுடன், இவரது கால் கைகளுக்கும் உடைவு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு கடந்த 12 தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

## அரச வைத்திய அதிகாரிகள் சங்க வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவசர மத்திய செயற்குழு கூட்டத்தின் போது, இது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என அதன் செயலாளர் ஹறித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நேற்று நண்பகல் 12 மணியுடன் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள ஜனாதிபதியின் பதில் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, தாம் அறிவித்துள்ள பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளில், மக்களை நேரடியாகப் பாதிக்கும் தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்தத் தாங்கள் தீர்மானித்துள்ளார்கள் என ஹறித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.ல்

ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு உள்ளிட்ட விடயங்களுக்கு அமைய, மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



# கடலட்டைப் பண்ணைகளை பூகோள அரசியலுடன் சம்பந்தப்படுத்துவது அடிப்படை ஏதுமற்ற கருத்தியல்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டமாகச் சாடல்

## பூகோள அரசியல் என்றால் தாம் இந்தியா பக்கமாம்

எமது பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள வளங்களை எமது மக்களே முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது மக்களினால் அமைக்கப்படுள்ள கடலட்டை பண்ணைகளை பூகோள அரசியலுடன் சம்மந்தப்படுத்துவது அடிப்படை அற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ். குருநகர் பகுதியை சேர்ந்த உள்ளூர் தொழில் முயற்சியாளர் ஒருவருக்கு சொந்தமான வீ.ஆர் இன்ரநெசனல் தனியார் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு இனப்பெருக்க நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கடலட்டை குஞ்சு விற்பனையை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து உரையாற்றும் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

”எமது பிரதேச வளங்களை பயன்படுத்தி எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் எதிர்காலத்தையும் சுபீட்சமாக்க முடியும் என்ற நம்பிக்கையிலும், எமது பிரதேச வளங்களின் பயன்களை எமது மக்களே பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவுமே கடலட்டை பண்ணை விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றேன்.

ஆனால், எமது மக்கள் பொருளாதார ரீதியில் வலுவடைவதை விரும்பாத அரசியல் விஷமிகள் சிலரும், கடற்றொழிலாளர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்ற சிலரும், கடலட்டைப் பண்ணை தொடர்பாக தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கடலட்டைப் பண்ணைகளை விஸ்தரிப்பதற்கு சீனாவில் இருந்து ஒரு குழுவினர் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர் என இன்றைய பத்திரிகை ஒன்றில்கூட செய்தி வெளியாகியிருக்கிறது. அது உண்மைக்கு புறம்பான செய்தி.

இவ்வாறான அடிப்படையற்ற, தீய நோக்கங் கொண்ட செய்திகள் தொடர்பாக நான் அலட்டிக் கொள்வதில்லை. மக்களும் அலட்டிக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

பூகோள அரசியல் என்று வந்தால் எனது முன்னுரிமை இந்தியாவாகவே இருக்கும் என்பதை பலமுறை தெரிவித்திருக்கின்றேன். அதனை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்” – என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் உருவாக்கப்படுவதன் மூலமே, கடலட்டைப் பண்ணைகளை எமது மக்களுக்கான நிலைபேறான பொருளாதார மார்க்கமாக உருவாக்க முடியும் என்ற நோக்கோடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ளூார் தொழில் முயற்சியாளரின் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையம் வெற்றிகரமான செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.













# தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில் சாதித்த யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்

யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் வலைப்பந்தாட்ட அணியினர் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டனர்.

அகில இலங்கை தாதியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியிலே யாழ். போதனா வைத்தியசாலை தாதிய அணியினர் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இந்நிகழ்வானது வரலாற்று ரீதியில் முக்கியமான ஒரு நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை வலைப்பந்தாட்ட தாதிய அணியினரை வைத்தியசாலை சமூகம் பாராட்டிக் கௌரவித்துள்ளது.















# காஸா எல்லையில் இருந்து 13 இலங்கையர்கள் எகிப்தின் ரஃபா எல்லையை அண்மித்துள்ளனர்


காஸா எல்லையில் சிக்கியுள்ள இலங்கையர்கள் 13 பேர் எகிப்தின் ரஃபா எல்லையை அண்மித்துள்ளனர்.

அவர்களைசந்திப்பதற்காகஇலங்கை தூதரக அதிகாரிகள் சிலர் அங்கு சென்றுள்ளனர் என பாலஸ்தீனத் திற்கான இலங்கை பிரதிநிதி அலு வலகத்தின் பிரதானி பென்னட் குரே தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலின் பின்னர் இக்குழு வினர் எகிப்தின் கெய்ரோவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அழைத்து வரப்படவுள்ளனர் என அவர் கூறி யுள்ளார்.

தற்போது காஸாவில் மூன்று குடும் பங்களை சேர்ந்த 17 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 4 இலங்கையர்கள் காஸா வில் உள்ள கத்தோலிக்க தேவாலயத் தில் தங்கியுள்ளனர் எனவும், அவர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்றும் பாலஸ்தீனத்தில் உள்ள இலங்கைப் பிரதிநிதி அலுவலகத்தின் பிரதானி பென்னட் குரே தெரிவித்துள்ளார்.




# ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு மற்றுமோர் உறுப்பினர் நியமனம்

தேர்தல் சட்டத்திருத்தம், ஊடகப் பயன்பாடு, அரசி யல் கட்சிகளைப் பதிவு செய்தல் போன்ற விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு மற்றுமொரு உறுப் பினர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, எலன் கார்மைல் வியர் டேவிட் ஆணைக் குழுவின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தலில், ஆணைக்குழுவின் துறைசார் விவகாரங்கள் விரிவுபடுத் தப்பட்டுள்ளன.

ஒக்டோபர் 15 ஆம் திகதி நியமிக்கப்பட்ட இந்த ஆணைக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் செயற்படுகின்றார்.

# புறக்கோட்டைத் தீ விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த யுவதி சாவு!



புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெரு பகுதியில் உள்ள ஆடையகம் ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெரு பகுதியில் உள்ள ஆடையகம் ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து, 9 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தி தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது.

இதன்போது, இந்த தீப்பரவலில் 23 பேர் காயமடைந் தனர். அவர்களில் சிலர் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப் பட்டிருந்தனர்.

இந்தநிலையில், தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப் பட்டிருந்த, தலவாக்கலை வட்டகொடை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய யுவதி, சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சீரற்ற வானிலை காரணமாக 6 ஆயிரத்து 723 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இதுவரை ஆயிரத்து 752 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 723 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், தென்மாகாணத்தில் ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 491 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹட்டன் – கொழும்பு வீதியுடனான போக்குவரத்து கினிகத் ஹேன பகுதியில் ஒரு வழிபோக்குவரத் தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஹட்டன் – கொழும்பு பிரதான வீதி யில் கினிகத்ஹேன பகுதியில் உள்ள கோவிலுக்கு அருகில் உள்ள ஒருபகுதி தாழிறங்கியுள்ளது.

இதன்காரணமாக இந்த இடத்தின் ஊடாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் அவதானத்துடன் செல்ல வேண்டும் என பொலிஸார் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

# அஸ்வெசும திட்டத்தை விரிவுபடுத்தவும் பிரச்சினைகளை தீர்க்கவும் விசேட வாரம்

அஸ்வெசும திட்டத்தை விரிவாக்கவும் தற்போது காணப்படும் பிரச்சினைகளை தீர்க்கவும் எதிர்வரும் 06 ஆம் திகதி முதல் விசேட வாரத்தை நடைமுறைப்படுத்த நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இந்த விசேட வாரம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சு கூறியுள்ளது.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் நிலவும் பிரச்சினைகளை உடனடியாக சரிசெய்து, தாமதமின்றி தகுதியான பயனாளிகளுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த விசேட வாரம் அமுல்படுத்தப்படுகின்றது.

இதுவரையில் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காத குடும்பங்களுக்கு உடனடி உதவிகள் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.




# பலஸ்தீன இன அழிப்புக்கு எதிராக கிண்ணியாவில் மக்கள் போராட்டம்

- ஹஸ்பர் -

இஸ்ரேலினால் மேற்கொள்ளப்படும் பலஸ்தீன் மக்கள் மீதான இன அழிப்புத் தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் கிண்ணியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

கிண்ணியா சூரா அமைப்புடன் பல சமூக நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி கண்டன எழுச்சி பேரணியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பலஸ்தீன் மக்கள் படுகின்ற இன்னல்கள் குறித்து விளக்கமளிக்கப் பட்டதோடு அவர்களுக்காக பிரார்த்தனையும் செய்யப்பட்டு கண்டனக் குரல்களும் எழுப்பப்பட்டன.






# மருதமுனையிலும் நேற்று மதியம் பேரணியும் துஆ பிரார்த்தனையும்

- ஏ.எல்.எம்.ஷினாஸ் -

பலஸ்தீன் நாட்டின் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை இஸ்ரவேல் உடனடியாக கைவிட வேண்டும், பலஸ்தீன் பூமியில் அந்த மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும், ஐ.நா யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை, அனைத்து பள்ளிவாசல்கள் ஒன்றிணைந்து மருதமுனை மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலின் முன்றில் ஏற்பாடு செய்த மாபெரும் அமைதிப் பேரணி நேற்று மதியம் இடம்பெற்றது.




இந்த நிகழ்வில் தாருல் ஹுதா அரபு கற்கைகள் கலாபீடத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) பலஸ்தீன மக்கள் குறிப்பாக சிறுவர்கள், பெண்கள் என அப்பாவி உயிர்கள் படுகொலை செய்யப்படுவதையும், சித்திரவதை செய்யப்படுவதையும் கண்டித்து உரையாற்றினார்.

விசேட துஆ பிரார்த்தனையை மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷெய்க் எப்.எம். அஹமது அன்சார் (நளீமி) நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் மருதமுனையில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களின் தலைவர்கள் ஒன்றிணைந்து இஸ்ரவேல் உடனடியாக யுத்தத்தை நிறுத்த கோரும் மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியிடம் கையளித்தனர். இதனை அடுத்து பேரணியில் கலந்து கொண்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.






# கல்முனையிலும் ஆர்ப்பாட்டம்

**(எம்.என். எம்.அப்ராஸ்)**

பலஸ்தீன் மக்களுக்காக ஆதரவு தெரிவித்து இஸ்ரேல் ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிரான கண்டன ஆர்ப் பாட்டம்,பேரணி நேற்று கல்முனையி லும் இடம்பெற்றது.

ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் அருகில் உல மாக்கள்,கல்முனை அனைத்துப் பள்ளி வாசல்களின் நிர்வாகிகள், கல்முனை பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், பெருமளவிலான பொது மக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இஸ்ரேலின் கொடூ ரத்தாக்குதலைக் கண்டித்து, பதாதை களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். மேலும் கண்டனப் பேருரை மற்றும் பலஸ்தீன மக்களுக் காக தூஆ பிராத்த்னையும் இதன் போது இடம்பெற்றன.










# பலாலியில் வந்திறங்கிய சந்தேகநபர் கைதானார்

## வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டவராம்




யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள் வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டு இந்தியாவில் தலைமறைவாகியிருந்து விமானத்தில் பலாலி ஊடாக நாடு திரும்பிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டு வெளிநாடுகளுக்கு தப்பித்த தேவா, பிரசன்னா ஆகியோரின் சகாவே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை இந்தியாவில் இருந்து விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த அவரை யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான குழுவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்பதனால் தேடப்பட்டு வந்த 27 வயதுடைய சந்தேக நபர் என்று பொலிஸார் கூறினர்.



# இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்க அமெரிக்க நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கும்

இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க அமெரிக்க ஒத்துழைப்பு அமைப்பான International Executive Services தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில், அதன் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு இது தொடர்பான கலந்துரையாடலை நடத்தியுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு சுமார் 100 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான கறவை மாடு மேலாண்மை அலகுகளின் திறனை அதிகரிக்கவும், புதிய தொழில்நுட்பத்தை வழங்கவும் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி ஒத்துழைப்பை வழங்கவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.




**உரலார் கேள்வி:- சம்பந்தன் அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்று சுமந் திரன் கருத்து வெளியிட்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** சம்பந்தன், சுமந்திரன் ஆகிய இருவர் பற்றியும் சிந்திக்க வேண்டி இருக் கிறது.

- சம்பந்தன், தன் முதுமையை உணரத் தவறியமை ஏன்? என்பது முதல் கேள்வி.
- பதவிமேல் கொண்ட ஆசையாலும் வசதிகள் மேல் கொண்ட விருப்பாலும்தான் அவர் பதவி துறக்கத் தயங்குகிறாரா? அல்லது வேறேதும் அழுத்தங்கள் அவரைப் பதவி துறக்க விடாமல் செய்கின்றனவா? என்பது அவர் பற்றி எழும் இரண்டாவது கேள்வி.
- தலைமை தாங்கும் காலத்தில் கட்சியையும் இனத்தையும் உயர்த்தும்வண்ணம் அவர் தீர்க்கதரிசனமான முடிவுகள் எதனையும் எடுத்




தாரா? என்பது மூன்றாவது கேள்வி.
- வடமாகாண முதலமைச்சர் தேர்வில், கட்சி உறுப்பினரின் கருத்துக்கு மாறாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து, பின்னர் அத்தேர்வு முற்று முழுதாய் தவறாய்ப் போக, இன்று வரை அதுபற்றி கட்சியிடமோ மக்கள்மன்றிலோ மன்னிப்புக் கோராத அவரது போக்கு ஒரு தலைமைக்குரியதா? என்பது நான்காவது கேள்வி.
- சுமந்திரனைத் தனது 'கையாளாக' வைத்துக் கொண்டு, நட்புக் கட்சிகளையும் தன்கட்சி உறுப் பினர்களையும் சிறிதும் மதியாமல் நடந்து, கட்சியின் உடைவுக்குக் காரணமான பின்னும் தலைமைக்கு ஆசைப்படுவது பொருத்தம் தானா? என்பது ஐந்தாவது கேள்வி.
- சுமந்திரனைத்தானும், தனக்கு அடுத்த தலைவ ராக இனங்காட்ட முனையாமல், அவ்வப்போது அவர் தலையில் 'தட்டித்தட்டி' அடக்கிவைத்து, தலைமைப் பதவியில் கடைசிக் காலம்வரை தான் ஒட்டிக் கொண்டிருக்கும் விருப்பினால் தானா? என்பது ஆறாவது கேள்வி.
- முதுமைப் பலவீனத்தை தவிர்த்துவிட்டுப் பார்த் தால், இன்றைய நிலையில் சம்பந்தனுக்கு நிகராய் கட்சியின் தலைமைக்குப் பொருத்த மானவர் எவரேனும் இருக்கிறாரா? என்பது சிந்திக்க வேண்டிய ஏழாவது கேள்வி.
- சம்பந்தனது முதுமையால் விளைந்த அவரது இயக்கமின்மை, என்றோ ஏற்பட்டுவிட்ட ஒன்றாய் இருக்க, இது வரை அது பற்றி வாய் திறக்காத சுமந்திரன், திடீரென சம்பந்தனுக்கு எதிரா கப் புரட்சி செய்ய முற்பட்டிருப்பது ஏன் என்பது சுமந்திரனை நோக்கிய முதலாவது கேள்வி.
- சம்பந்தன் ஓய்வு பெறவேண்டும் என்று உரைப்ப வர், அவரிடத்தை நிரப்பத்தக்க ஒரு தலைவரை இனங்காட்ட முனையாமல் இருப்பது சரிதானா? என்பது அவரை நோக்கிய இரண்டாவது கேள்வி.
- சம்பந்தனுக்கு அடுத்து தலைவராய் சுமந் திரன் தன்னை முன்னெடுக்க நினைக்கி றாரா? அல்லது வேறெவரையும் அவ்விடத் துக்கு கொண்டு வர விரும்புகிறாரா? என்பது சுமந்திரனுக்கான மூன்றாவது கேள்வி.
- வேறெவரையும் அவ்விடத்திற்குக் கொண்டு வர விரும்புகிறார் எனில், சம்பந்தனுக்கு நிகராக இனங்காட்டக்கூடிய அத்தகைய உறுப்பினர்கள் எவரும் கட்சிக்குள் இருக்கிறார்களா? என்பது சுமந்திரனுக்கான நான்காவது கேள்வி.
- அதுவன்றி, தானே கட்சிக்குத் தலைமை தாங்க லாம் என்று சுமந்திரன் நினைக்கிறார் என்றால், கட்சிக்குள் அதற்கான செல்வாக்கு அவருக்கு இருக்கிறதா? என்பது அவரை நோக்கிய ஐந் தாவது கேள்வி.
- சம்பந்தனோடு இணைந்து அவரது பல பிழை யான முடிவுகளுக்குத் துணையாக இருந்த இவரால், கட்சிக்கும் இனத்திற்கும் நல்வழி காட்ட முடியுமா ? என்பது சுமந்திரனை நோக் கிய முக்கியமான ஆறாவது கேள்வி.
- சுமந்திரன், தலைமைப் பதவிக்குப் பொருத்த மில்லை என்று சம்பந்தனை விலகச் சொல்கி றாரா? அல்லது அப்பதவியில் தான் 'கண் வைத்து' அதற்காக அவரை விலகச் சொல்கி றாரா? என்பது சுமந்திரனுக்கான நிறைவுக் கேள்வி.

– சிந்திக்கச் சிந்திக்க கேள்விகள் பெருகுகின் றனவே அன்றி, விடைகள் எவையும் கிடைப்பன வாய்த் தெரியவில்லை. மூன்று கற்களால் அமைந்த

**(15ஆம் பக்கம் பார்க்க)**

**(14ஆம் பக்கத் தொடர்ச்சி)**


ஓரடுப்பில் ஏற்றப்பட்ட பானையில், சமையல் சரியாக நடப்பதற்காக, அவ்வடுப்பில் பலவீனப்பட்டுவிட்ட ஒரு கல்லை மாற்றவேண்டுமானால் அதைவிட பலமான ஒரு கல்லைத் தயார் செய்து விட்டுத்தான், பலவீனப்பட்ட பழைய கல்லை மாற்றவேண்டும். இல்லையேல் பானை கவிழ்ந்து அனைத்தும் வீணாகிவிடும். அதனால், துணிந்து சமபந்தனை ஓய்வு பெறச் சொல்லும் சுமந்திரனுக்கு அவரை விட பலமாக இயங்கக்கூடிய ஒரு புதிய தலைவரை இனங்காட்ட வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. அது பற்றி அவர் சிந்திக்க வேண்டும்.

**சல்லடையாரின்சலிப்பு:-'யூடுபூருட்டஸ்?' எண்டு குளறும் சத்தம் சம்பந்தரின் வீட்டுப் பக்கமாயக் கேட்கிறதாம். வாரிதியாரின் கேள்விகள் சரியாய்த்தான் படுகின்றன. இரண்டுபேரிடமும் இந்த கேள்விகளுக்கு பதில் நிச்சயம் இருக்காதுங்கோ...!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:-'சம்பந்தன் வடக்குக் கிழக்கு தமிழ்மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவரது இடத்திற்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை' என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சர் அறிக்கை விட்டிருக்கிறாரே பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** நான் சும்மா இருக்கலாம் என்று நினைத்தாலும், நீங்கள் என்னை அப்படி



இருக்க விட மாட்டீர்கள் போல. ஆனாலும் நீங்கள் கேட்டபடியால் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது.

'எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன்' என்பார்கள். மு.முதலமைச்சரின் அறிக்கை அதைத்தான் காட்டுகிறது. சுமந்திரனின் மேல் தனக்கிருக்கும் அளவற்ற கோபத்தை, சம்பந்தன் மீதான அளவற்ற மதிப்பாய்ப் பதிவு செய்திருக்கிறார் மு.முதலமைச்சர்.

'பாவம்', அவரை நினைத்து சிரிப்பதைத் தவிர வேறேதும் செய்வதற்கில்லை. சம்பந்தன் வடகிழக்கின் அடையாளம் என்றும், அவரை வெளியேற்றினால் அவரிடத்துக்கு வேறெவரும் இல்லை என்றும் கூச்சமில்லாமல் பேசி இருக்கிறார் அவர்.

இவரே, முன்பு சம்பந்தனால் பதவி பெற்ற சில நாள்களுக்குள்ளேயே அவரது தலைமை பிழையானது என்றாற்போல அறிக்கைகள் விட்டும் அவருக்கு எதிரான பல செயல்களைச் செய்தும் 'கூத்துகள்' ஆடினார். இப்போது, தான் செய்த கீழ்மைகளையெல்லாம் மறந்து விட்டு இன்று சம்பந்தனுக்குக் கொடி பிடிக்கப் பார்க்கிறார்.வெட்கக்கேடு!

பதவி ஆசையால் தன் அரசியல் வாழ்க்கையில் 'பலன்ஸ்' தவறிவிட்டு, இப்போது அதைச் சரிசெய்து தொடர்ந்து மேலும் பதவிச் சுகம் அனுபவிக்க நினைந்து, மேலும் மேலும் 'பலன்ஸ்' தவறிக் கொண்டிருக்கிறார் மு.முதலமைச்சர்.

எங்கள் கழகத்தில் இருந்தபோது மற்றவர்களால் வணங்கத்தக்கவராக அவரை மதிப்போடு வைத்திருந்தோம். அதனால் தான் நாங்களும் கூட அவர் முதலமைச்சராய் வருவது நல்லது என நினைத்தோம். அப்போதைய அவரது முகம் சேற்றுக்கு மேல் தெரியும் தெளிந்த நீர் என்று எங்களுக்குத் தெரியாமல் போயிற்று. பதவி ஆசை வந்து கலக்கியடிக்க இப்பொழுது தான் சேறு கிளம்பி உண்மை உணர்த்துகிறது.

அவர் பேச்சை இனி யார் கேட்கப் போகிறார்கள்? என்னவும் பேசிவிட்டுப் போகட்டும். விட்டுத்தள்ளுங்கள்.

**சல்லடையாரின் சலிப்பு :- 'ஆடு நனையுதெண்டு ஓநாய் விழுந்து விழுந்து அழுகுதுங்கோ...!'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- அரச ஊழியருக்கான சம்பளம் விரைவில் உயர்த்தப்படும். என்று ஜனாதிபதி அறிவித்திருப்பது பற்றி....**

**உலக்கையார் பதில் :-** வேறேதோ விலையேற்றம் வரப்போகிறது போல.

**சல்லடையாரின் சலிப்பு :- ஏற்றம், இற(ர)க்கத்தில் தான் கொண்டு போய் விடுமுங்கோ....!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- தமிழர்களை வெட்டிக் கொள்வேன் என்று கூறிய அம்பிட்டியதேரர் பின்னர் அதற்காக தமிழ்மக்களிடம் மன்னிப்புக் கோரியிருப்பதைப் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** பிழையை எவரும் செய்யலாம். செய்த பிழைக்காக மன்னிப்புக்கோர சிலரால்தான் முடியும். அந்த வகையில் தேரரைப் பாராட்டத்தான் வேண்டியுள்ளது.

துறவிகள்தான் பொதுமக்களின் கீழ்மையை அகற்றி உயர்த்த வேண்டியவர்கள். அவர்களே பகை வளர்க்க முயன்றால் நாடு என்னாகும்?

தமிழர்கள் தமக்கான உரிமையைத்தான் கோருகிறார்கள். அதற்காக, அவர்களை சிங்களவர்களின் எதிரியாய் பதிவாக்க நினைப்பது எவ்வளவு பெரிய தவறு!

துறவு என்பது உலகை நேசிக்கும் ஒரு தகுதி. துறவியாகிவிட்ட தேரர் தான் சிங்களவர்க்கு மட்டுமானவர் என நினைப்பது மாபெரும் பிழை. அவர், தமிழருக்கும் தான் பொதுவானவர் என்று நினைத்துப் பழக வேண்டும். உண்மைத்துறவின் அடையாளம் அதுதான். இதெல்லாம் செயற்கைத் துறவால் வரும் தவறுகள்.



காலம் எல்லோரையும் கனிவிக்கும் எனக் காத்திருப்போம்!

**சல்லடையாரின் சலிப்பு :- துறவை மதிக்க வேண்டியது தமிழர்களின் கடமை. மறப்போம்! மன்னிப்போம்! மதிப்போம்!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# இன்றைய ராசி பலன்கள் - 04.11.2023




வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வதன் மூலம் உங்கள் மனதிற்கு ஒரு மாற்றத்தை அளிக்கலாம். உணர்ச்சிவசப்படுவதை விட யதார்த்தமாக யோசிக்க வேண்டியது அவசியம். அமைதியான மனநிலையில் இருங்கள்.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேர லாம். பணிகளில் தவறுகள் நேராவண்ணம் உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

உங்கள் அகந்தை மனப்பாங்கை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம்.

இன்று தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். நிதியில் ஸ்திரத்தன்மையை தக்க வைக்க பயனுள்ள யுக்திகளைக் கையாள வேண்டும்.

உங்களுக்கு தொடை மற்றும் கால்வலி பாதிப்பு ஏற்படலாம். தியானப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.




நீங்கள் உறுதியுடன் இருந்தால் நற் பலன்களைக் காணலாம். வெற்றி பெறுவோம் என்று நம்புங்கள். இறுதியில் வெற்றி உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்.

உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்களிடம் கூடுதல் ஆற்றல் காணப்படும். அதனை பணியில் வெளிப்படுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நட்போடு பழகுவீர்கள். உண்மையாக இருப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி உருவாகக்கூடிய நல்ல சூழ்நிலை காணப்படும்.

இன்று பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் வைப்பு உள்ளது.

நீங்கள் துடிப்பான மன நிலையுடன் காணப்படு வீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக் கும்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினை ஒன்றை கையாள்வதில் கருத்தாய் இருப்பீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்க முயலுங்கள்.

உங்கள் பணியில் இன்று வளர்ச்சி கிடைப்பதற்கு உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் பேசும் போது மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தகவல் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் நிதியைப் பொறுத்தவரை முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். புதிய முதலீடுகள் செய்வது அல்லது அதற்கான முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல் வலி அல்லது ஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உற்சாகமான நாளாக அமை வது உறுதி. இன்று வெற்றிக்கு உகந்த நாள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் விசேஷம் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். புதிய நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.

நீங்கள் இன்று தன்னம்பிக்கையுடன் பணியாற்று வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வேலை வாய்ப்பு காரண மாக மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் துணையிடம் அன்புடன் காணப்படுவீர்கள்.

நிதி வளர்ச்சி உயர்ந்து காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். புதிய முதலீடுகள் மற்றும் சேமிப் புகள் லாபகரமானதாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். எந்த விஷ யத்தையும் இலேசாக எடுத்துக் கொண்டால் இன்று எந்த விதமான ஆரோக்கியப் பிரச்சினையும் வராது.




இன்று மன உளைச்சலுக்கு ஆளா வீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு அல்லது பதட்டத்தை தவிர்த்துவிடுங்கள். உங்கள் இலக்குகளை அடைவது இன்று கடின மாக இருக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது பதட்டத்தை உண்டாக்கும். முக்கிய மான பணிகள் கூட நிலுவையில் காணப்படும்.

இன்று உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு ஏற்பட அவரை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படுகின்றது. பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

ஆரோக்கியம் சிறந்து விளங்க அதிக அளவில் நீரைப் பருகவும். தலைவலி மற்றும் சில அசௌகரியங்கள் காணப்படும்.




உங்களின் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இலக்குகளை நிர்ண யித்து அதை அடைவதற்கு முயன்றால் வெற்றி காணலாம். உங்கள் பணி களை முன்னுரிமைப்படுத்தி அதன்படி ஆற்றுங்கள்.

நீங்கள் இன்று கடினமான உழைத்து உங்கள் மேலதிகாரிகளை உங்கள் பக்கம் ஈர்ப்பீர்கள். உங்கள் பணிகளை எளிதாக செய்வதற்கான திறமை இன்று உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிப்பீர்கள்.

உங்களிடம் போதிய அளவைவிட பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் அதிக ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு மிகுதியான வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நீங்கள் நன்கு பயன்படுத்துவீர்கள். இன்றைய தினத்தின் வாய்ப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப் படும். உங்கள் பணி குறித்து அவர்கள் பெருமை கொள்வார்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்ப டுத்துவீர்கள். உங்கள் பிரியமானவருடன் நல்லுறவை அமைத்துக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று முழுவதும் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் மன தைரியம் உங்களை சிறப்பாக வைத்திருக்க உதவும்.




இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்சிகளை கட்டுப் படுத்த வேண்டும். தியானம் அல்லது யோகா போன்றவைகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகளைக் கையாள்வது உங்களுக்கு கடின மாக காணப்படும். அதிகரித்து காணப்படும் பணிச் சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். எனவே கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்று மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

இன்று பணத்தை முறையாக பயன்படுத்த முடியாது. பணம் விரைவில் கரையும். இது உங்களுக்கு கவ லையை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.11.2023

## தனுசு

இன்றைய நாள் ஸ்திரமாக இருக்காது. இன்று மனதில் ஏற்படும் சலனங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றும் ஸ்திரத்தன்மை இன்று குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது. உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் அன்பை வெளிபடுத்த தயங்குவீர்கள். மனதில் குழப்பங்கள் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்றைய பண வரவு உங்களுக்கு திருப்தியை அளிக்காது. பண வரவு இருந்தாலும் அதை உங்களால் தக்க வைத்துக் கொள்ள முடியாது.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

## கும்பம்

எதிர் காலம் பற்றிய எண்ணங்களும் கனவுகளும் உங்கள் மனதில் நிறைந்து காணப்படும். இது அனைவரிடத்திலும் காணப்படும் பொதுவான விருப்பம். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு சிறந்த நாள்.

பணியிடத்தில் உன்னதமான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

பரிசுப் பொருள்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் துணை திருப்தி காண்பார்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் தேவையான பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

## மகரம்

உங்களின் தகவல் பரிமாற்றத் திறமையால் வெற்றி காண்பீர்கள். இறை மந்திரங்களை ஜபிப்பதன் மூலமும் ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பதன் மூலமும் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். இதனால் வளர்ச்சி பெறுவீர்கள்.

உங்கள் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பின் மூலம் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் குடும்ப விஷயங்களை ஆலோசிப்பீர்கள். முன்பிருந்த அகந்தை மனப்பான்மையை முறியடிப்பீர்கள்.

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். ஆன்மீக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

நீங்கள் துடிப்புடன் காணப்படுவீர்கள்.

## மீனம்

உங்கள் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க வேண்டியது அவசியம். இன்று அதை பொறுப்புகள் காணப்படும். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாகும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் அடையலாம்.

இருக்கும் வேலையை விட்டு வேறு வேலைக்கு போகும் எண்ணம் உண்டாகும். உங்களுக்கு திருப்தி அளிக்கும் ஒரு மாற்றத்தை இன்று நீங்கள் விரும்புவீர்கள்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுக்காமல் சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க இந்த அனோகுமுறை தேவை.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். அதனைச் சுமையாக உணர்வீர்கள். பணத்தை திட்டமிட்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கி செலவுகளை தவிர்த்திடுங்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS
CENTRAL PARK
CENTRALPAR JA-ELA
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# மாலைதீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு 2.27 கோடி ரூபா அபராதம்




மாலைதீவில் சிறை பிடிக்கப்பட்ட தூத்துக்குடியை சேர்ந்த மீனவர்களின் விசைப்படகுக்கு இந்திய மதிப்பில் 2.27 கோடி கோடி அபராதம் விதித்து மாலைதீவு மீன்பிடி, கடல் வளங்கள் மற்றும் விவசாய அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தைச் சேர்ந்த அந்தோணி ஜெயபாலன் என்பவரது விசைப்படகில் 12 மீனவர்கள் கடந்த மாதம் முதலாம் திகதி ஆழ்கடலில் தங்கி மீன்பிடிக்கச் சென்றனர்.

ஒக்டோபர் 22 ஆம் திகதி மாலைதீவு எல்லை அருகே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த மாலைதீவு கடலோர காவல் படையினர், தமது கடல் பகுதிக்குள் நுழைந்து மீன்பிடித்தனர் என்று கூறி 12 மீனவர்களையும் கைது செய்தனர். அத்துடன், விசைப்படகையும் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்கள் மாலைதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது குறித்து தவகலறிந்த கனிமொழி எம்.பி., சிறை வைக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் விசைப் படகை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்தார். மேலும், மீனவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இதற்கிடையே, மாலைதீவு மீன்பிடி, கடல் வளங்கள் மற்றும் விவசாய அமைச்சகத்தில் இருந்து விசைப்படகு உரிமையாளர் அந்தோணி ஜெயபாலனுக்கு அனுப்பிய எழுத்தாணையில், மாலைதீவின் கடல் எல்லைக்குள் அனுமதியின்றி நுழைந்து, தடை செய்யப்பட்ட மீன் வகைகளை பிடித்துள்ளனர். இது குறித்து பதிலளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தோணி ஜெயபாலன் கடந்த 29 ஆம் திகதி மாலைதீவுக்கு சென்று அதிகாரிகள் முன்பு ஆஜரானார். அப்போது இந்தியாவைச் சேர்ந்த 2 தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். ஒக்டோபர் 19 ஆம் திகதி கடல் நீரோட்டம் காரணமாக படகு மாலைதீவு கடல் எல்லை பகுதிக்குள் நுழைந்தது.

மாலைதீவு கடல் பகுதியில் இருப்பதை உணர்ந்தவுடன், படகில் இருந்த மீனவர்கள் உடனடியாக வெளியேறு வதற்கு முயன்றனர். ஆனால், கடல் நீரோட்டம் காரணமாக படகு மீண்டும் மாலைதீவு கடல் பகுதிக்குள் நுழைந்தது என அந்தோணி ஜெயபாலன் விளக்க மளித்தார்.

மேலும், மீனவர்கள் வீசிய வலை விசைப்படகின் இயந்திரத்தில் சிக்கியதால் மாலைதீவு கடல் பகுதியில் இருந்து வெளியேற முடியவில்லை என்றும் இயந்திரத்திலிருந்து மீன் வலையை அவிழ்க்க 5 மணி நேரம் ஆனது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் கப்பலில் உள்ள 10 மைல் நீளமுள்ள வலைகளை கைமுறையாக மீட்டெடுக்க மேலும் 10 மணி நேரம் செலவானது என்றும் அந்தோணி ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

வலையை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, தற்செயலாக சுமார் 40 சுறா மீன்களைப் பிடித்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், மோசமான வானிலைக்கான ஆதாரம் இல்லை என்றும் விசைப்படகு மாலைதீவு கடல் பகுதியில் அனுமதியின்றி மீன்பிடிக்க பிரவேசித்துள்ளது எனவும் 10 தொன் நிறையுள்ள மீன்கள் இருந்தன எனவும் மாலைதீவு அதிகாரிகள் குற்றம் சாட்டினர். .

விசாரணைக்குப் பின்னர், மாலைதீவு கடல் எல்லை பகுதியில் அனுமதியின்றி நுழைந்து சுறாக்களை பிடித்த குற்றத்துக்காக இந்திய மதிப்பில் 2.27 கோடி ரூபாவை அதிகாரிகள் அபராதமாக விதித்தனர். இந்த அறிவிப்பைப் பெற்ற 30 நாட்களுக்குள் அபராத தொகையை செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அந்தோணி ஜெயபாலன் கூறும் போது, நாங்கள் இப்போது ஆதரவற்ற நிலையில் இருக்கிறோம். மத்திய, மாநில அரசுகள் இந்தப் பிரச்சினையை பேசி தீர்த்து, விசைப் படகையும், மீனவர்களையும் பாதுகாப்பாக விடுவிப்பதை உறுதிசெய்யும் என்று நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் விதமாக ஓரிரு நாளில் போராட்டங்களை அறிவிக்க உள்ளோம் என்று தருவைக்குளம் பங்குத் தந்தை, ஊர் மக்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வளி மாசடைவால் பாடசாலைகளுக்கு இரண்டு நாட்களுக்கு விடுமுறை!

வளி மாசடைவு காரணமாக இந்தியாவின் – டில்லியில் உள்ள பாடசாலைகளுக்கு இரண்டு நாட்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அங்குள்ள அரச மற்றும் தனியார் பாடசாலைகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் இரண்டு வாரங்களில் டில்லியில் வளி மாசடைவு மேலும் தீவிரமடையும் என சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விஷ தன்மையுடன் கூடிய பொருள்களை எரிப்பதன் காரணமாக வளி மாசடைவு விகிதம் அதிகரித்து வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.



அத்துடன், டில்லியில் வளி மாசுப்பாடு அதிகரித்து வருவதனால் அங்கு சுவாச நோய்க்கு உள்ளாகுபவர்களின் விகிதமும் அதிகரித்து வருகிறது என மாநில சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

# காசாவை நோக்கி முன்னேறும் இஸ்ரேல் படைகள்: 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் பலி!



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக் கிடையிலான போர் தொடங்கிய தினத்தில் இருந்து இதுவரை 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன் நாட்டைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போர் தொடங்கி இதுவரையான நாட்களில் 9,061 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு சுகாதாரத் துறையை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கிடையில் போர் மூண்டது. இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 3 வாரங்களில் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. உயிரிழந்துள்ள 9 ஆயிரத்திற்கு மேற்பட்டோரில் 18 வயதிற்கு உட்பட்ட 3 ஆயிரத்து 760 சிறுவர்களும் உள்ள டங்குவர்.

இதேவேளை, இந்த யுத்தத்தில் இஸ்ரேல் தரப்பில் இருந்து 1,400 பேர் உயிரிழந்துள்ளனர்.

போர் தொடங்கிய பின்னர் முதன் முறையாக கடந்த இரு தினங் களுக்கு முன்னர் 100 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் ரபா எல்லை வழியாக வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இஸ்ரேல் தரைவழிப்படைகள் காசாவை நோக்கி மேலும் முன்னேறியுள்ளன என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

# ஈரானில் போதை மறுவாழ்வு மையத்தில் தீ விபத்து: 32 பேர் பலி, 16 பேர் காயம்

ஈரானில் உள்ள போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 16 பேர் காயமடைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானின் காஸ்பியன் கடல் பகுதியை அண்மித்த கிலான் மாகாணத்தில் போதைப்பொருள் மறுவாழ்வு மையம் ஒன்று செயல்பட்டு வந்திருக்கிறது.

இதையடுத்து, எதிர்பாராத விதமாக திடீரென இந்த மையத்தில் நேற்று



அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்பு வீரர்கள், மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். அப்போது, அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்துள்ளது.

இந்த தீ விபத்தில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 16 பேர் காயமடைந்துள்ளனர் என்று முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் பற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்க துணை ஜனாதிபதியுடன் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் சந்திப்பு

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ்க்கும், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

லண்டனில் இடம்பெறும் ஏ.ஐ பாதுகாப்பு உச்சிமாநாட்டின் போது, இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கமலா ஹறிஸின் விஜயமானது காஸா மோதல் தொடர்பான விடயமாக அமையா விட்டாலும், இந்த சந்திப்பின் போது, போர் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது என குறிப்பிடப்படுகின்றது.



போரின் போது, பொதுமக்கள் இலக்குவைக்கப்படக்கூடாது என்பதில் சர்வதேசம் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் என இந்த சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

இஸ்ரேலுக்கான ஆதரவை வழங்கும் பிரித்தானியாவின் நிலைப்பாட்டை அறிவித்தமைக்கு இதன்போது, அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹறிஸ் நன்றிக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணிலின் அரசுக்கு நாமல் எச்சரிக்கை

## கடுமையான தீர்மானம் எடுப்போம் என மிரட்டுகின்றார்

சர்வதேச நாணய நிதியத்துக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டால் அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் தீர்மானம் எடுப்பார்கள்.

நாட்டு மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் அமைந்தால் அது தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுப்போம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் எடுத்துள்ள ஒருசில தீர்மானங்களினால் நாட்டு மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மின்னுற்பத்தி கட்டமைப்பில் மாற்று திட்டங்களை செயற்படுத்துவதை விடுத்து மின்கட்டண அதிகரிப்புக்கு மாத்திரம் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. முறையற்ற வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு முதல் பெறுமதி சேர் வரி வீதத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என சர்வதேசத்துக்கு காண்பிப்பதால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை செலவு அதிகரிப்பினால் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டால் அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் தீர்மானம் எடுப்பார்கள்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாட்டு மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரவு – செலவுத் திட்டம் காணப்பட்டால் கடுமையான தீர்மானம் எடுப்போம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். நிறைவடைந்த ஒரு வருட காலத்தில் பாரிய மாற்றங்கள் ஏதும் சமூக கட்டமைப்பில் ஏற்படவில்லை. நாட்டு மக்களை தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கினால் மக்கள் போராட்டம் மீண்டும் தலைதூக்கும். – என்றார்.

# மதிலை உடைத்து வானையும் சேதப்படுத்திய பொலிஸ் ஜீப்!

## வாழைச்சேனையில் நேற்றுச் சம்பவம்



கல்குடா பொலிஸ் நிலையத்திலிருந்து வாழைச்சேனை நோக்கி நேற்று வெள்ளிக்கிழமை வேகமாகப் பயணம் செய்த கல்குடா பொலிஸ் நிலைய ஜீப் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாழைச்சேனை துறைமுகத்துக்கு முன்னாலுள்ள வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றில் அது மோதியுள்ளது.

இவ் விபத்தில் மதில், ஜீப், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஆகியவை சேதமடைந்துள்ளன.

இவ் விபத்தில் ஜீப்பைச் செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk



# ஆப்கானிஸ்தானுக்கு நான்காவது வெற்றி!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான், நெதர்லாந்தை வீழ்த்தி நான்காவது வெற்றியைப் பதிவு செய்தது. இதன்மூலம் அந்த அணி அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பையும் அதிகரித்துக்கொண்டது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் – நெதர்லாந்து அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி, ஆப்கானிஸ்தானின் பந்துவீசசுத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் திணறியது.

இதனால் அந்த அணியால் ஓட்டங்களைச் சேர்க்க முடியாமல் போக, விக்கெட்டுகள் மளமளவெனச் சரிந்தன.

இறுதியில் நெதர்லாந்து அணி 46.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்களைச் சேர்த்தது.

நெதர்லாந்து சார்பாக துடுப்பாட்டத்தில், ஆகக்கூடுதலாக ஏங்கல் பிரெக்ட் 58 ஓட்டங்களைச் சேர்த்தார்.

ஆப்கானிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், மொஹமட் நபி 3 விக்கெட்டுகளையும் நூர் அஹமட் 2 விக்கெட்டுகளையும் ரஹ்மான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 180 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய குர்பாஸ் (10) மற்றும் இப்ராகிம் ஜட்ரான் (20) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பின்னர், ரஹ்மத் ஷா மற்றும் ஹஸ்மத்துலா ஷாகிதி ஜோடி சேர்ந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

ரஹ்மத் ஷா அரைச்சதம் (52) அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஹஸ்மத்துல்லா ஷாகிதியுடன் ஓமர்சாய் ஜோடி சேர்ந்தார்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 31.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 181 ஓட்டங்களைச் சேர்த்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஹஸ்மத்துல்லா ஷாகிதி 56 ஓட்டங்களுடனும் ஓமர்சாய் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தானின் மொஹமட் நபி தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம், ஆப்கானிஸ்தான் அணி புள்ளிப்பட்டியலில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியது.

இன்று இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கும் ஆட்டத்தில் நியூஸிலாந்து – பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பிக்கும் போட்டியில் அவுஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 7 | 7 | 0 | 0 | 0 | 14 | 2.102 |
| 02 | தென்னாபிரிக்கா | 7 | 6 | 1 | 0 | 0 | 12 | 2.290 |
| 03 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 04 | நியூஸிலாந்து | 7 | 4 | 3 | 0 | 0 | 8 | 0.484 |
| 05 | ஆப்கானிஸ்தான் | 7 | 4 | 3 | 0 | 0 | 8 | -0.330 |
| 06 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 0 | 0 | 6 | -0.024 |
| 07 | இலங்கை | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.162 |
| 08 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.398 |
| 09 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.446 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.652 |